**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 32** **நாள் : 25.01.2022**

**மாதவரம் மண்டலத்திற்குட்பட்ட மந்தைவெளி (தெலுங்கு காலனி) எரிவாயு மயானபூமியில் பராமரிப்பு பணி நடைபெற உள்ளதால், பொதுமக்கள் அருகிலுள்ள புழல் ஜி.என்.டி. சாலை மயானபூமி, சித்தரம் நகர் மற்றும் தாங்கல் இந்து மயானபூமிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலம், வார்டு-27க்குட்பட்ட மந்தைவெளி (தெலுங்கு காலனி) எரிவாயு மயானபூமியின் தகனமேடை LPG எரிவாயு தகன மேடையாக மாற்றும் பணி மற்றும் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், 28.01.2022 முதல் 06.02.2022 வரை மேற்கண்ட மயானபூமி இயங்காது.

மேலும், பராமரிப்பு பணிகள் நடைபெறும் 28.01.2022 முதல் 06.02.2022 வரையிலான நாட்களில் பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-23, புழல்-ஜி.என்.டி. சாலை மயானபூமி, தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு-34, சித்தரம் நகர் இந்து மயானபூமி மற்றும் திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-68, பல்லவன் சாலை-தாங்கல் இந்து மயானபூமி ஆகியவற்றை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**